# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு மற்றும் பணிகள் என்பனவற்றின் பெறுபேறுகள்

முக்கிய விடயங்கள்:

## தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டிற்குமான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் 2022 சனவரியிலும் விரிவடைந்தன


**தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், 2021 திசெம்பருடன் ஒப்பிடுகையில் 0.6 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்புடன் 2022 சனவரியில் 58.7 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்தது.** மாதகாலப்பகுதியில் தொழில்நிலையில் மீட்சியுடன் ஒன்றிணைந்து புதிய கட்டளைகள், உற்பத்தி என்பவற்றில் பதிவாகிய மேம்பாடுகள் இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது. மேலும், மாதத்திற்கு மாதம் அடிப்படையில் கொள்வனவுகளின் இருப்பு அதிகரித்த அதேவேளை நிரம்பலர்களின் விநியோக நேரம் நீட்சியடைந்தது.

புதிய கட்டளைகள், உற்பத்தி மற்றும் கொள்வனவுகளின் இருப்பு குறிப்பாக புடவை மற்றும் அணியும் ஆடைகள், உணவு மற்றும் குடிபானத் துறைகளில் ஏற்பட்ட விரிவடைதல், கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணின் மேம்படுதலுக்குப் பிரதானமாகப் பங்களித்தது. 2022 சனவரியில் தொழில்நிலை துணைச் சுட்டெண் சாதகமான எல்லைக்கு மீட்சியடைந்த போதிலும், புடவை மற்றும் அணியும் ஆடைகள் துறைத் தயாரிப்பு தொடர்புடைய தொழில்நிலை துணைச் சுட்டெண் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து துறைக்கு ஊழியர்களை ஈர்த்துக்கொள்வதில் சிரமத்தினைப் பிரதிபலித்தது. அதேவேளை, புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி என்பவற்றின் விரிவடைதலுக்கிணங்க கொள்வனவுகளின் இருப்பு அதிகரித்தது.

**தயாரிப்பு கொ.மு.சு சுட்டெண் பெறுமதி 58.7**

2021 திசெம்பருடன் ஒப்பிடுகையில் 0.6 சுட்டெண் புள்ளிகள் கொண்ட அதிகரிப்பு

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

| மாறி | திசெ 2021 | சன 2022 | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **58.1** | **58.7** | **+** | **அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்** |
| | | கொ.மு.சு. துணைச்சுட்டெண்கள் | | |
| புதிய கட்டளைகள் | 65.5 | 62.2 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| உற்பத்தி | 58.0 | 59.8 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 48.0 | 55.2 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| கொள்வனவுகளின் இருப்பு | 52.0 | 55.7 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 61.1 | 56.6 | - | நீட்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

நிரம்பலர் விநியோக நேரம், மாதத்திற்கு மாதம் அடிப்படையில் 2022 சனவரியில் மெதுவான வேகத்தில் நீட்சியடைந்தது. கப்பற்பொருள் ஆவணங்களின் இசைவுபெறுதல், நாணயக் கடிதத்தை திறத்தல், துறைமுகத்தில் நெருக்கடிகள், ஆகியவற்றின் பகுதியளவான தடைகள் காரணமாக இறக்குமதி கப்பற்சரக்குகளைப் பெற்றுக்கொள்வதில் தாம் தாமதங்களை அனுபவித்ததாக பல பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர்.

உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதார நிலைமைகளில் மேலும் மேம்பாடுகளை எதிர்பார்த்து, அடுத்துவருகின்ற மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் உயர்வான மட்டங்களில் காணப்பட்டன.

### *உலகத் தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு*

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சுட்டெண் 2021 திசெம்பரிலிருந்து 1.0 சுட்டெண் புள்ளிகளினால் குறைவடைந்து 2022 சனவரியில் 53.2 இனை எட்டியது.

முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் சனவரியில் ஐரோப்பிய வலயம், ரஷ்யா ஆகிய நாடுகளின் தயாரித்தல் கொ.மு.சுட்டெண் உயர்வான வேகத்தில் அதிகரித்தது. மேலும், ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இந்தியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் தயாரித்தல் கொ.மு.சுட்டெண் 2022 சனவரியில் மெதுவான வேகத்தில் அதிகரித்தது. எனினும், சீனாவின் தயாரிப்பு கொ.மு.சுட்டெண் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் சனவரியில் குறைவடைந்தது.

*மூலம்: மார்க்கிட்[1], 2022 பெப்புருவரி 14இல் உள்ளவாறு*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குநராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் யூரோ வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.*

**பணிகள் கொ.மு.சுட்டெண்ணானது, 57.5 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்து 2022 இன் தொடக்கத்தில் பணிகள் துறையில் தொடர்ச்சியான விரிவடைதலினை எடுத்துக்காட்டியது.** புதிய வியாபாரங்கள், தொழில் நடவடிக்கைகள், தொழில்நிலை மற்றும் நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் துணைச் சுட்டெண்களில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்கள், இவ்வதிகரிப்பிற்கு துணையளித்திருந்தன.

2021 திசெம்பருடன் ஒப்பிடுகையில் புதிய வியாபாரங்கள் குறிப்பாக, போக்குவரத்து, தொழில்சார் பணிகள், ஏனைய தனிப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் கல்வித் துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகளுடன் 2022 சனவரியில் மேலும் உயர்வடைந்தன.

உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புடைய கட்டுப்பாடுகள் தொடர்ச்சியாகத் தளர்த்தப்பட்டமைக்கு மத்தியில் தொழில் நடவடிக்கைகள் 2021 திசெம்பருடன் ஒப்பிடுகையில் 2022 சனவரியில் மெதுவான வளர்ச்சியினைக் காண்பித்தன. அதற்கமைய, போக்குவரத்து மற்றும் தொழில்சார் பணிகள் துணைத் துறைகள் இம்மாதகாலப்பகுதியில் குறிப்பிடத்தக்க மேம்பாடுகளை அறிக்கையிட்டன. இதற்கு மேலதிகமாக, உல்லாசப் பயணிகள் வருகைகளில் அதிகரிப்பினால் துணையளிக்கப்பட்டு தங்குமிடம், உணவு மற்றும் குடிபான துணைத் துறையின் தொழில்நடவடிக்கைகளும் மேலும் அபிவிருத்திகளைப் பதிவுசெய்தன. அதேவேளை, நிதியியல் பணிகள், வேறு தனிப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் கல்வி ஆகிய துணைத்துறைகளுடன் தொடர்புபட்ட தொழில்நடவடிக்கைகளும் மாதகாலப்பகுதியில் அதிகரித்தன.

தொழில் நடவடிக்கைகளில் அதிகரிப்பிற்கு ஆதரவளிக்கும் பொருட்டு கம்பனிகள் தொடர்ந்தும் ஆட்சேர்ப்புகளை மேற்கொண்டமையினால் 2022 சனவரியில் தொழில்நிலை மூன்றாவது மாதமாகவும் தொடர்ச்சியாக அதிகரித்தது. அதேவேளை, வழமைபோன்று அநேகமான ஊழியர்கள் பணிக்குத் திரும்பியமையினால் நிலுவையிலுள்ள பணிகள் சனவரியில் மெதுவான வேகத்தில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன.

| மாறி | திசெ 2021 | சன 2022 | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **62.4** | **57.5** | - | **அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்** |
| | | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | |
| புதிய வியாபாரங்கள் | 67.8 | 57.5 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில் நடவடிக்கை | 72.8 | 62.0 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 53.0 | 52.0 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 45.7 | 47.4 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் | 72.8 | 68.5 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |


மூலம்: இலங்கை மத்திய வங்கி

ஒமிக்ரோன் நோயாளர்களில் மீண்டும் அதிகரிப்புக்கு மத்தியில் உலகளாவிய நோய்த்தொற்று தொடர்பிலான கட்டுப்பாடுகள் தொடர்ச்சியாக தளர்த்தப்பட்டமைக்கிடையில் தொழில் நடவடிக்கைகளில் வளர்ச்சியுடன் தொடர்புபட்ட சாதகமான எண்ணப்பாங்கிற்கமைவாக அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தொழில் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் மேலும் மேம்பட்டன. எவ்வாறிருப்பினும், இறக்குமதி தொடர்புபட்ட கட்டுப்பாடுகள் மற்றும் தமது தொழில் நடவடிக்கைகளுக்கான பணவீக்க அழுத்தம் என்பவற்றிலிருந்து எதிர்மறையான தாக்கம் தோன்றியமை பற்றி சில பதிலிறுப்பாளர்கள் தொடர்ந்தும் சுட்டிக்காட்டினர்.

**பணிகள்**
**கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**57.5**

**2021 திசெம்பருடன் ஒப்பிடுகையில் 4.9 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சி**

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

## *உலகத் தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு*

உலகளாவிய பணிகள் கொ.மு.சு, 2021 திசெம்பரில் 54.7 இலிருந்து 2022 சனவரியில் 51.3 இனைப் பதிவுசெய்து உலகளாவிய பணிகள் உலகளாவிய பணிகள் நடவடிக்கைகளின் மிதமான விரிவடைதலைக் காண்பிக்கின்றது.

ஐக்கிய அமெரிக்கா, சீனா, இந்தியா மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2022 சனவரியில் அந்நாடுகளின் பணிகள் துறைகள் விரிவடைந்தமையினை எடுத்துக்காட்டிய அதேவேளை யப்பானின் கொ.மு.சுட்டெண் சீர்குலைவொன்றினை எடுத்துக்காட்டியது.

*(மூலம்: மார்க்கிட்[1], பெப்புருவரி 14, 2022 இல் உள்ளவாறு)*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.
கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.
கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.